30.12.2024
ஊடக வெளியீடு

**DATO' IR. PATHMANATHAN K.**
CEO, PBAHB and PBAPP.

# நீர் விநியோக அறிவுறுத்தல்: பினாங்கு தீவில் உள்ள அணைகள் "முழுமையாக மீட்கப்படவில்லை"

- **ஆயிர் ஈத்தாம் அணை மற்றும் தெலுக் பஹாங் அணை ஆகியவை மழையால் முழுமையாக நிரம்பவில்லை.**
- **2025 ஆம் ஆண்டின் முதல் காலாண்டில் அதிக பண்டிகை கொண்டாட்டங்களின் நீர் விநியோகத்திற்கான தயாரிப்பில் வறண்ட வானிலை நெறிமுறைகளை PBAPP செயல்படுத்தியுள்ளது.**
- **பினாங்கு நீர் பயனீட்டாளர்கள் ஏப்ரல் அல்லது மே 2025 இல் மழைப் பெய்யும் வரை நீரை சிக்கனமாகப் பயன்படுத்த வேண்டும்.**

பினாங்கு, திங்கள், 30.12.2024: 2024 ஆம் ஆண்டின் கடைசி 4 மாதங்களில், பினாங்கு தீவில் உள்ள நீர் பிடிப்புப் பகுதிகளில் (WCAs) PBAPP குறிப்பிடத்தக்க மழையைப் பதிவு செய்தது. ஆனால், தீவில் உள்ள இரண்டு அணைகளும் முழுமையாக நிரம்பவில்லை.

1.9.2024 முதல் 29.12.2024 வரையிலான காலக்கட்டத்தில், அணைகளின் WCAகளில் பதிவான மழை அளவு பின்வருமாறு:

| **அணை** | | **மழைப் பொழிவு (கடந்த 120 நாட்கள்)** |
|---|---|---|
| **1.** | **ஆயிர் ஈத்தாம்** | **979.0 மி.மீ** |
| **2.** | **தெலுக் பஹாங்** | **944.5மி.மீ** |

ஆயிர் ஈத்தாம் அணை மற்றும் தெலுக் பஹாங் அணையின் நிலைகளில் ஏற்பட்ட முன்னேற்றங்களைப் பின்வருமாறு சுருக்கமாகக் கூறலாம்:

| அணை | | பயன்படுத்தக்கூடிய கொள்ளளவு 31.8.2024 | பயன்படுத்தக்கூடிய கொள்ளளவு 29.12.2024 | % முன்னேற்றம் |
|---|---|---|---|---|
| 1. | ஆயிர் ஈத்தாம் அணை | 30.8% | 76.7% | +45.9% |
| 2. | தெலுக் பஹாங் அணை | 25.8% | 61.7% | +35.9% |

## முக்கிய காரணிகள்

ஆயிர் ஈத்தாம் அணை மற்றும் தெலுக் பஹாங் அணையின் தற்போதைய நிலைகளின் பின்னணியில் உள்ள முக்கிய தரவுகள் மற்றும் புள்ளிவிவரங்கள் பின்வருமாறு:

- ஆயிர் ஈத்தாம் அணை (1963 இல் திறக்கப்பட்டது) மற்றும் தெலுக் பஹாங் அணை (1999 இல் திறக்கப்பட்டது). இந்த இரு அணைகளும் அந்தந்த WCA-களில் மழையால் நிரப்பப்படுவதற்காகக் கட்டப்பட்டன.

- ஆயிர் ஈத்தாம் அணை மற்றும் தெலுக் பஹாங் அணை இரண்டும் "தினசரி அணைகள்" ஆகும். இவற்றில் இருந்து தினசரி அடிப்படையில் மூல நீர் எடுக்கப்பட்டு குறிப்பிட்ட சேவைப் பகுதிகளில் உள்ள நீர் பயனீட்டாளர்களுக்கு விநியோகிக்க சுத்திகரிக்கப்பட்ட நீரை உற்பத்தி செய்கிறது. இதன் பொருள், இந்த சேவைப் பகுதிகளில் குறைந்த மழைப்பொழிவு மற்றும் அதிக நீர் தேவை இருக்கும் போதெல்லாம், அணைகளின் திறன்கள் தவிர்க்க முடியாமல் வீழ்ச்சியடையும்.

- சூடான மற்றும் வறண்ட எல் நினோ நிகழ்வுடன் தொடர்புடைய 2024 உலர் பருவத்தின் காரணமாக ஆகஸ்ட் 2024 இல் இரண்டு அணைகளின் பயன்படுத்தக்கூடிய செயல்திறன் குறைவாக இருந்தது.

- பினாங்கில் நீர்ப் பயன்பாடு அதிகமாகப் பதிவு செய்கிறது, இது 2024, நவம்பர் மாதத்தில் சராசரியாக ஒரு நாளைக்கு 883 மில்லியன் லிட்டர் (MLD) ஆகும்

- எனவே, கடந்த 4 மாதங்களில் கணிசமான மழைப் பெய்த போதிலும், இரண்டு தீவு அணைகளின் பயன்படுத்தக்கூடிய கொள்ளளவு முழுமையாக மீட்கப்படவில்லை.

**விரிவாக்கப்பட்ட மெங்குவாங் அணை (EMD) நிலை**

பெருநிலத்தில், விரிவாக்கப்பட்ட மெங்குவாங் அணையின் (EMD) நிலை சிறப்பாக உள்ளது. 29.12.2024 நிலவரப்படி, EMD இன் பயனுள்ள திறன் 91.6% ஆகும்.

இந்த அணை, செபராங் பிறை (பினாங்கு தென்மேற்கு மாவட்டம்) நீர் விநியோக சேவைகளைத் திறம்பட மற்றும் "மாற்றுத் தேர்வாக" செயல்படுகிறது. இது சுங்கை மூடாவில் இருந்து மூல நீர் குறைப்பாடு ஏற்படும் போது நீர் விநியோகிக்க உதவுகிறது.

**நீர் விநியோக செயல்முறை (ஜனவரி - மார்ச் 2025)**

அனைத்துலக வானிலை அறிக்கைகள் ஒரு நற்செய்தியை வெளியிட்டுள்ளது. இது ஒரு நடுநிலையானத் தொடக்கத்தை சுட்டிக்காட்டுகின்றன. ENSO (El Niño Southern Oscillation) அல்லது mild La Niña (குளிர் மற்றும் மழைக்காலம்) 2025 முதல் பாதியில் நிகழவிருப்பதாக அறிவித்தது.

பினாங்கு தீவில் மழைப்பொழிவு முறைகள் 2025 இல் இன்னும் சீரானதாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. ஏப்ரல் மற்றும் மே மாதங்களில் ஓரளவு மழைப் பொழிவு ஏற்படும் என நம்பிக்கை கொள்கிறோம்.

ஆயினும்கூட, PBAPP அதன் வறண்ட வானிலை நீர் விநியோக நெறிமுறைகளைச் செயல்படுத்தியுள்ளது. இது 2024 நவம்பர் நடுப்பகுதியில் இருந்து பினாங்கில் போதுமான நீர் விநியோகத்தை உறுதி செய்கிறது.

அதே நேரத்தில், பினாங்கு நீர்ப் பயனீட்டாளர்கள் அனைவரும் 2025 முதல் காலாண்டில் நீரைச் சிக்கனமாகப் பயன்படுத்துமாறு வேண்டுகோள் விடுக்கிறோம்.

2024 ஆம் கடைசி காலாண்டில் பெரிய அளவிலான நீர் விநியோகத் தடைகளை பினாங்கு சந்திக்காதது அதிர்ஷ்டமாகக் கருதப்படுகிறது.
கெடா, கிளந்தான் மற்றும் திரெங்கானு மாநிலங்களில் சமீபத்திய வெள்ளம் காரணமாக நீர் விநியோக சேவைகளில் தடங்கல்களை எதிர்நோக்கின

எனினும், ஆயிர் ஈத்தாம் அணை மற்றும் தெலுக் பஹாங் அணையின் உகந்த திறன்களைக் காட்டிலும் குறைவான திறன்களை நாம் கவனத்தில் கொள்ள வேண்டும். இந்த இரண்டு அணைகளும் ஆயிர் ஈத்தாம், பார்லிம்,

தெலோக் பஹாங், பத்து பிரிங்கி, தஞ்சோங் பூங்கா, தஞ்சோங் தொகோங், மற்றும் சுற்றியுள்ள பகுதிகளில் மொத்தம் 66,378 நீர்ப் பயனீட்டாளருக்கு நீரை விநியோகிக்கிறது.

நீர் சேமிப்பு குறிப்புகளுக்கு www.pba.com.my அகப்பக்கத்தை வலம் வரவும். 2025 ஆம் ஆண்டில் உங்கள் நீர்ப் பயன்பாட்டைக் குறைப்பதன் மூலம், புதிய ஆண்டில் நீண்ட கால அணை இருப்புக்களை உறுதி செய்வதில் நீங்கள் பங்களிப்பீர்கள்.

நன்றி.

---

எழுத்தாக்கம்: Syarifah Nasywa bt Syed Feisal Barakbah
Corporate Communications Section

மின்னஞ்சல்: syarifah@pba.com.my